தினத்தந்தி

DAILY THANTHI




# வனங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு பேரணி

கோவை, மார்ச்.22–

கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் உள்ளது. இங்கு வனங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பேரணி நடை பெற்றது. இதற்கு விஞ்ஞானி கண்ணன் தலைமை தாங்கி பேசும் போது, கோடிக்கணக்கான மக்களின் உணவு பாதுகாப்புக்கும் நிலை யான வாழ்வாதாரத்துக்கும் காடுகள் பங்களிக்கின்றன. வனத்துறை 86 மில்லியனுக்கு மேலான பசுமை வேலைகளை வழங்குகின்றன. 2.4 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் சமையலுக்கு மர அடிப்படை யிலான ஆற்றலை பயன்படுத்துகின்றனர் என்றார். பேரணியை சி.குன்னி கண்ணன் தொடங்கி வைத்தார். ஆர்.எஸ்.புரத்தில் நடை பெற்ற பேரணியில் விஞ்ஞானி யசோதா உள்பட பலர் கலந்து கொண் டனர்.

19. News in Dinathanthi, Coimbatore, 22.03.2024, Observance of International Day of Forests by ICFRE- IFGTB EIACP.